# இனவெறி மற்றும் பாகுபாடு

இனவெறி மற்றும் பாகுபாடு என்றால் என்ன?
இனவெறி பற்றி சட்டம் என்ன சொல்கிறது?
நீங்கள் இனவெறிச் செயலால் பாதிக்கப்பட்டவரா அல்லது சாட்சியா? என்ன செய்வது?
இனவெறி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு எடுக்க வேண்டுமா?

# இனவெறி மற்றும் பாகுபாடு என்றால் என்ன?

இனவெறி என்பது ஒரு குழுவினர் அவர்களின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு அல்லது மதம் காரணமாக மற்றவர்களை விட சிறந்தவர்கள் அல்லது மோசமானவர்கள் என்று நினைப்பது ஆகும். இனவெறி அன்றாட வாழ்வில் (வேலை, வீடு தேடல், வீட்டாருடனான உறவு, முதலியன வற்றில்) காணப் படுகிறது. இது (புண்படுத்தும் பேச்சு, அவமதிப்பு, தாக்குதல், விலக்குதல், முதலிய) வெவ்வேறு வடிவங்களில் வெளிப் படுத்தப் படுகிறது. இனவெறி நமது சமூகத்திலும் நமது நிறுவனங்களிலும் வேரூன்றியுள்ளது. இது நமது பல நூற்றாண்டுகள் பழமையான வரலாற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## இனவெறி என்றால் என்ன?

இனவெறி என்பது ஒரு குழுவினர் அவர்களின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு அல்லது மதம் காரணமாக மற்றவர்களை விட சிறந்தவர்கள் அல்லது மோசமானவர்கள் என்று நினைப்பது ஆகும்.
இனவெறி என்பது அதிகாரத்தைப் பற்றியது. இது சில குறிப்பிட்ட மக்கள் குழுக்களைப் பலவீனப்படுத்தவும் மற்றவர்களைப் பலப்படுத்தவும் பயன்படுகிறது.
வேலை, வீடு தேடல் அல்லது அண்டை வீட்டாருடனான உறவு போன்ற அன்றாட வாழ்க்கையின் பல பகுதிகளில் இனவெறி உள்ளது.
இனவெறி அவமதிப்பு, தாக்குதல் மற்றும் விலக்குதல் போன்ற பல்வேறு வடிவங்களை எடுக்கலாம்.
இனவெறி எப்போதும் வேண்டுமென்றோ அல்லது நனவாகவோ இருக்காது. இது நமது சமூகத்திலும், நிறுவனங்களிலும், சமூகப் பழக்கவழக்கங்களிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. உதாரணமாக, கருப்பர்களுக்கு எதிரான இனவெறி, காலனித்துவம் மற்றும் அடிமைப் படுத்தல் ஆகியவற்றைக் கொண்ட நமது வரலாற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## பாகுபாடு

பாகுபாடு என்பது ஒரு நபர் அல்லது மக்கள் குழு, அவர்களின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு, மதம், பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது ஊனம் காரணமாக நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதைக் குறிக்கிறது.
இனப் பாகுபாடு என்பது ஒருவர் மற்றவரின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு, அல்லது மதம் காரணமாக அவருக்கு அநீதி இழைப்பதைக் குறிக்கிறது.

## இனவெறியின் பல்வேறு வடிவங்கள்

- தனிநபர்களுக்கு இடையிலான இனவெறி: இவை பிறரின் பிறப்பு அல்லது தோற்றம் (தோல் நிறம்) காரணமாக ஒருவரிடம் ஏற்படும் தப்பெண்ணங்கள் அல்லது மூடிய மற்றும் ஆக்ரோஷமான அணுகுமுறை. இது புண்படுத்தும் வார்த்தைகள், அவமதிப்பு, பாகுபாடு அல்லது வன்முறை மூலம் வெளிப்படுத்தப் படலாம்.
- கலாச்சார இனவெறி: இனவெறி சார்ந்த முன்அனுமானங்கள் (ஸ்டீரியோடைப்கள்) காரணமாக சில கலாச்சாரங்கள் குறைத்து மதிக்கப் படுகின்றன அல்லது மதிக்கப் படுவதில்லை. "எல்லா ஆப்பிரிக்கர்களும் அல்லது எல்லா ஆசியர்களும்..." என்று நாம் நினைப்பது ஒரு ஸ்டீரியோடைப் ஆகும். திரைப்படங்கள், கலை அல்லது கலாச்சார படைப்புகளின் மூலம் ஸ்டீரியோடைப்கள் வலுப்படுத்தப் படலாம்.
- கட்டமைப்பு இனவெறி (அல்லது கட்டமைப்புகளில் இனவெறி): இது சமூகத்தின் விதிகள் மற்றும் அமைப்பில் இனவெறி மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்போது நிகழ்கிறது.

யாரும் நேரடியாக விரும்பாவிட்டாலும் கூட, இது பெரும்பாலும் பாகுபாட்டிற்கு வழிவகுக்கிறது.

- நிறுவன இனவெறி (அல்லது நிறுவனங்களில் இனவெறி): பள்ளிகள் அல்லது வேலைச் சூழல் போன்ற சமூகத்தின் முக்கியமான நிறுவனங்களில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாடு காணப்படும் போது இது நிகழ்கிறது. நிறுவன ரீதியான இனவெறி எப்போதும் கண்ணில் படுவதில்லை. அது மறைக்கப்பட்டுள்ளது. வெளியில் இருந்து பார்த்தால் எதுவும் தெரியாமல், எல்லாம் இயல்பாகத் தெரிகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/racisme-et-discrimination/cest-quoi-le-racisme-et-la-discrimination

# இனவெறி பற்றி சட்டம் என்ன சொல்கிறது?

சுவிட்சர்லாந்தில் இனவெறி மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட சட்டம் இல்லை. இருப்பினும், சுவிட்சர்லாந்து அதன் அரசியலமைப்பு மற்றும் குற்றவியல் சட்டத்தில் பாகுபாட்டை தடை செய்கிறது. தனியார் சட்டத்தில் (சிவில் சட்டம்) இனவெறி மற்றும் பாகுபாட்டிலிருந்து பாதுகாக்கும் சில பிரிவுகள் உள்ளன.

## "இனம்" என்ற வார்த்தையின் பயன்பாடு

"இனம்" என்ற சொல் பெரும்பாலும் சட்டத்தில் பயன்படுத்தப் படுகிறது. இந்தக் காரணத்திற்காக, உண்மையில் மனிதனில் இனங்கள் இல்லாவிட்டாலும், "இனம்" என்ற வார்த்தையை நாமும் பயன்படுத்துகிறோம். மனிதர்கள் அனைவரும் ஒரே ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்.
ஆனால் மக்களின் மனதிலும் மனப்பான்மையிலும், "இனங்கள்" என்ற எண்ணம் இன்னும் உள்ளது. இது ஒரு சமூகக் கற்பிதம். இனப் பாகுபாடு இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது: மக்கள், தங்கள் "இனம்" காரணமாக, தங்களுக்கு இடையே சமமாக இல்லை. மனிதனில் இனங்கள் இல்லாவிட்டாலும் கூட.

## கூட்டாட்சி அரசியலமைப்பு

சுவிஸ் சட்டங்களில் கூட்டாட்சி அரசியலமைப்பு மிக முக்கியமானது. கூட்டாட்சி அரசியலமைப்பு நாட்டின் முக்கிய விதிகளை வரையறுக்கிறது. அது சுவிட்சர்லாந்து மற்றும் அதன் அதிகாரிகளுக்கு இடையே தனிநபர்களின் அடிப்படை உரிமைகளையும் உறுதி செய்கிறது.
அரசியலமைப்பில் எழுதப்பட்டவை (முக்கிய விதிகள் மற்றும் உரிமைகள்) மக்களுக்கு இடையிலான உறவுகளைப் பற்றியது அல்ல. அது மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான உறவைப் பற்றியது மட்டுமே. அரசியலமைப்புச் சட்டம், அரசின் துஷ்பிரயோகங்கள் அல்லது அநீதிகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கிறது.
கூட்டாட்சி அரசியலமைப்பு (Cst.) சட்டத்தின் முன் அனைத்து மனிதர்களும் சமம் (பிரிவு 8 பத்தி 1) என்று கூறுகிறது.
அதே பிரிவின் பத்தி 2 யாருக்கும், எதன் காரணமாகவும், உதாரணமாக, அவர்களின் தோற்றம், "இனம்", மொழி, வாழ்க்கை முறை அல்லது மத நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக பாகுபாடு காட்டப் படக்கூடாது என்று குறிப்பிடுகிறது.

## தண்டனைச் சட்டம் மற்றும் அதன் பிரிவு 261b

தண்டனைச் சட்டம் என்பது ஒரு கூட்டாட்சி விதிமுறை ஆகும்.
அது நமது சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்களை வரையறுக்கிறது. அது அந்த செயல்களுக்கான தண்டனைகளை கூறுகிறது.
மற்றவர்களை வெறுப்பு மற்றும் பாகுபாட்டில் தள்ளுவது ஏற்றுக் கொள்ள முடியாதது.
குற்றவியல் சட்டம் (CP) இதைத் தடை செய்கிறது. அது கீழ்க்கண்டவர்களை தண்டிக்கிறது:

- ஒருவரின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு, மதம் அல்லது பாலியல் நோக்குநிலை காரணமாக ஒரு நபர் அல்லது ஒரு மக்கள் குழுவிற்கு எதிராக மற்றவர்களை வெறுப்பு அல்லது பாகுபாடு காட்டத் தூண்டும் நபர்கள்
- ஒரு நபர் அல்லது மக்கள் குழுவைப் பற்றிய இனவெறி கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் நபர்கள்
- ஒரு நபர் அல்லது மக்கள் குழுவை அவர்களின் தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு, மதம் அல்லது பாலியல் நோக்குநிலை காரணமாக பகிரங்கமாக இழிவுபடுத்தும் அல்லது பாகுபாடு காட்டும் நபர்கள்
- இனப் படுகொலை (குறிப்பிட்ட மக்களை அழித் தொழிப்பது) என்றே ஒன்று இல்லை என்றோ அல்லது அது அவ்வளவு தீவிரமானது இல்லை என்றோ பகிரங்கமாகக் கூறும் நபர்கள்.
- தோற்றம் (தோல் நிறம்), பிறப்பு, மதம் அல்லது பாலியல் நோக்குநிலை காரணமாக ஒரு நபர் அல்லது மக்கள் குழுவிற்கு சேவைகள் அல்லது பொருட்களை வழங்க மறுக்கும் நபர்கள். இந்த சேவைகள் மற்றும் பொருட்கள் அனைவருக்கும் பொதுவானவை.

இந்தச் செயல்கள் பொது வெளியில் செய்யப் படுவது மட்டுமே தடை செய்யப்பட்டுள்ளது. இதன் பொருள், இருதரப்பினர் ஒருவரையொருவர் உண்மையில் அறிந்திருக்கவில்லை என்றால் மட்டுமே.
இது போன்ற செயல்களைத் தண்டிக்க, தண்டனை அபராதமாகவோ (பணம்) அல்லது சில நேரங்களில் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையாகவோ இருக்கலாம்.

## ஒருவர் இனவெறியால் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருந்தால், அவர் என்ன செய்ய வேண்டும்?

சட்டத்தால் தடைசெய்யப்பட்ட இந்த செயல்களால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியாக இருப்பவர், அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்கலாம். அந்த நபர் அதை எழுத்துப்பூர்வமாக அரசு வழக்கறிஞருக்கோ அல்லது விசாரணை நீதிபதிக்கோ அறிவிக்கலாம்.
பின்னர் அதிகாரிகள் விசாரிப்பார்கள். செயல்கள் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 261b இன் கீழ் இருந்தால், நீதிமன்றங்கள் இந்தச் செயல்களைச் செய்தவர்கள் மீது நேரடியாக வழக்குத் தொடரும் (அலுவல் ரீதியான சட்ட நடவடிக்கைகள்).

## சிவில் சட்டம்

சிவில் சட்டம் மக்களிடையேயான உறவுகளின் விதிகளை வரையறுக்கிறது. இது ஒவ்வொரு நபரின் உரிமைகள் மற்றும் கடமைகளை வகுக்கிறது.
உதாரணமாக, சிவில் சட்டம் குடும்ப உறவுகள், வாரிசுரிமை மற்றும் பல்வேறு ஒப்பந்தங்களை, அதாவது வேலைவாய்ப்பு, விற்பனை, வாடகை மற்றும் சேவை ஒப்பந்தங்களை ஒழுங்கு படுத்துகிறது.
சிவில் சட்டம் தனிநபர் பாதுகாப்பை உறுதி செய்கிறது (சிவில் சட்டம் CC இன் பிரிவு 28 மற்றும் கடமைகள் சட்டம் CO இன் பிரிவு 328).
தனிநபர் பாதுகாப்பு என்றால் என்ன?
சிவில் சட்டத்தின் படி, தனிநபர் பாதுகாப்பு என்பது, ஒருவரின் உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்பு, அவரின் மாண்பு, தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் ஆளுமைக்கு முக்கியமான பிற கூறுகள் ஆகியவை பாதுகாக்கப்படல் ஆகும்.
இனவெறிச் செயலால் ஒருவரின் ஆளுமை பாதிக்கப்படுகிறதா? அந்தச் செயலைச் செய்தவரை நீதியின் முன் நிறுத்தும் உரிமை அவருக்கு உண்டு. அந்த நபர் இழப்பீடும் பெறலாம்.

## இனப் பாகுபாட்டிற்கு எதிரான சர்வதேச ஒப்பந்தம்

மற்ற நாடுகளைப் போலவே, சுவிட்சர்லாந்தும் Convention internationale sur l'élimination de toutes les formes de discrimination raciale (அனைத்து வகையான இனப் பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தில்) கையெழுத்திட்டுள்ளது. கையெழுத்திடுவதன் மூலம், நாடுகள் தங்கள் நாடுகளில் உள்ள அனைத்து வகையான இனப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கு உறுதியளிக்கின்றன.
மக்கள் குழுக்களுக்கும் "இனங்களுக்கும்" இடையே புரிதலை ஊக்குவிப்பதற்கும் அவர்கள் உறுதியளிக்கிறார்கள்.
"இனம்" என்ற சொல் பெரும்பாலும் சட்டத்தில் பயன்படுத்தப் படுகிறது. இந்தக் காரணத்திற்காக, உண்மையில் மனிதனில் இனங்கள் இல்லாவிட்டாலும், "இனம்" என்ற வார்த்தையை நாமும் பயன்படுத்துகிறோம். மனிதர்கள் அனைவரும் ஒரே ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்.
ஆனால் மக்களின் மனதிலும் மனப்பான்மையிலும், "இனங்கள்" என்ற எண்ணம் இன்னும் உள்ளது. இது ஒரு சமூகக் கற்பிதம். இனப் பாகுபாடு இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது: மக்கள், தங்கள் "இனம்" காரணமாக, தங்களுக்கு இடையே சமமாக இல்லை. மனிதனில் இனங்கள் இல்லாவிட்டாலும் கூட.
இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் தொடர்ந்து அறிக்கைகளை எழுத வேண்டும். தங்கள் நாட்டில் இனப் பாகுபாட்டை ஒழிக்க அவை என்ன செய்கின்றன என்பதை இனப் பாகுபாடு ஒழிப்புக் கமிட்டியிடம் முன்வைக்க வேண்டும் (Comité pour l'élimination de la discrimination raciale).
சுவிட்சர்லாந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. சுவிட்சர்லாந்தும் இந்த அறிக்கைகளை எழுத வேண்டும்.
ஒரு நபர் அல்லது மக்கள் குழு இனவெறியால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் சுவிட்சர்லாந்தில் அனைத்து வழிகளிலும் முயற்சி செய்தும் வெற்றி பெறவில்லை என்றால், அவர்கள் இனப் பாகுபாடு ஒழிப்புக் கமிட்டியைத் தொடர்பு கொள்ளலாம் (Comité pour l'élimination de la discrimination raciale).
பின்னர் கமிட்டி, அந்த நபரின் பெயரைக் குறிப்பிடாமல், சம்பந்தப்பட்ட நாட்டிற்கு நிலைமையை அனுப்புகிறது.
பின்னர் கமிட்டி, நாட்டிற்கும் சம்பந்தப்பட்ட நபருக்கும் பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுடன் ஒரு தீர்மானத்தை அனுப்புகிறது. இது நாட்டிலும் மக்களிடையேயும் இனவெறியின் யதார்த்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. சம்பந்தப்பட்ட நாடு இந்தப் பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால் நீதிமன்றங்கள் சட்ட முடிவுகளை எடுக்க இந்தப் பரிந்துரைகளைப் பயன்படுத்துகின்றன.

## எடுத்துக் காட்டுகளாக நீதிமன்ற தீர்ப்புகள்

பாகுபாடு குறித்த நீதிமன்றத் தீர்ப்புகளை அறிந்து சேகரிப்பது முக்கியம். இது புதிய சூழ்நிலைகளுக்கு எடுத்துக் காட்டுகளாக செயல்படுகிறது. நாம் இதை நீதித்தொகுப்பு (ஜூரிஸ்ப்ரூடன்ஸ்) என்று அழைக்கிறோம்.
சுவிட்சர்லாந்தில், La Commission fédérale contre le racisme (இனவெறிக்கு எதிரான கூட்டாட்சி ஆணையம்) அதன் வலைத்தளத்தில் நீதிமன்ற தீர்ப்புகளைப் பதிவு செய்கிறது.
சுவிட்சர்லாந்தின் கரிட்டாஸ் (Caritas Suisse) தொண்டு நிறுவனத்தின் Info-racisme என்ற இனவெறித் தகவல் மையமும் நீதிமன்றத் தீர்ப்புகளை பார்வைக்கு வைக்கிறது. அது அவற்றை வேலை, சமூக தொடர்புகள் மற்றும் ஊடகங்கள், பள்ளி மற்றும் மதம் போன்ற தலைப்புகளில் சுருக்கி வகைப்படுத்தி வைத்து இருக்கிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/racisme-et-discrimination/que-dit-la-loi-au-sujet-du-racisme

# நீங்கள் இனவெறிச் செயலால் பாதிக்கப்பட்டவரா அல்லது சாட்சியா? என்ன செய்வது?

இனப் பாகுபாடு பள்ளி, வேலை, பொழுதுபோக்கு, போன்ற வாழ்க்கையின் அனைத்து பகுதிகளிலும் ஏற்படலாம். Bureau de l'intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்) இனவெறிச் செயலால் பாதிக்கப்பட்ட எவருக்கும், அது பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருந்தாலும், ஆதரவு, தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

## நீங்கள் இனவெறிச் செயலால் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருந்தால் என்ன செய்வது?

வாழ்க்கையின் அனைத்து பகுதிகளிலும் இனப் பாகுபாடு ஏற்படலாம்.
Bureau de l'intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்) இனவெறிச் செயலால் பாதிக்கப்பட்ட எவருக்கும், அது பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருந்தாலும், ஆதரவு, தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.
ஆலோசனைகள் இலவசம் மற்றும் இரகசியமானது.
ஆலோசனைகள் பல்வேறு வடிவங்களில் இருக்கலாம்:

- நேருக்கு நேர் சந்திப்பு மூலம்
- தொலைபேசி மூலம்
- மின்னஞ்சல் மூலம்

நீங்கள் 032 420 51 12 என்ற எண்ணில் தொலைபேசி மூலம் சந்திப்பை பதிவு செய்து கொள்ளலாம்:
திங்கள் மற்றும் வியாழன் 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 மணி முதல் 4:30 மணி வரை
வெள்ளி 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 மணி முதல் 4:00 மணி வரை
அல்லது secr.bi@jura.ch க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
Bureau de l'intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்)
ஜூரா காந்தோனில் உள்ள அனைத்து பாகுபாடு வழக்குகளையும் பதிவு செய்கிறது.
வழக்குகள் பெயர் எழுதப் படாமல் அநாமதேயமாக வைக்கப் படுகின்றன.
நீங்கள் ஒரு பாகுபாடு காட்டும் சூழ்நிலையை அறிவிக்க விரும்புகிறீர்களா?
எப்படியிருந்தாலும், முடிந்தவரை அதிகமான தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குங்கள்.
உதாரணமாக: குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள் (யார், என்ன, இடம், தேதி), புகைப்படங்கள் எடுங்கள், செய்திகள் மற்றும் வீடியோக்களை வைத்திருங்கள்.
புகார் அளிக்க விரும்புகிறீர்களா? இந்த அனைத்து ஆதாரங்களும் வழக்கின் தொடர்ச்சிக்கு பயனுள்ளதாக இருக்கும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/racisme-et-discrimination/vous-etes-victime-ou-temoin-de-racisme-que-faire

# இனவெறி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு எடுக்க வேண்டுமா?

இனவெறியை எதிர்த்துப் போராடுவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன: இனவெறி பற்றி அறிந்து கொள்தல், அறிந்ததை மற்றவர்களுடன் பேசுதல், அச்செயல்களைக் கண்டனம் செய்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் திட்டங்களில் ஈடுபடுதல். Bureau de l’intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்) ஈடுபட விரும்பும் மக்களுக்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கிறது.

## உங்களிடம் ஒரு திட்டம் இருக்கிறதா?

இனவெறிக்கு எதிரான போராட்டத்தில், தடுப்பு அல்லது விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் ஈடுபட விரும்புகிறீர்களா? பாகுபாட்டை எதிர்த்துப் போராடவும், "ஒன்றாக வாழ்வது" என்ற திட்டத்திற்காக இயங்கவும் உங்களிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?
Bureau de l’intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்) இனவெறியை எதிர்த்துப் போராட திட்டங்களை உருவாக்க விரும்பும் மக்களுக்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கிறது.
இந்த அலுவலகம் ஒவ்வொரு ஆண்டும் இனவெறிக்கு எதிரான செயல்பாட்டு வாரத்தை (SACR) ஏற்பாடு செய்கிறது.
இந்த வாரத்திற்கான ஒரு செயலை நீங்களும் பரிந்துரைக்கலாம்.

## வேலைச்சூழலில்

உங்கள் தொழில்முறை குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புகிறீர்களா அல்லது பணியிடத்தில் பாகுபாடு காட்டப்படும் பிரச்சினைகள் குறித்து உங்கள் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க விரும்புகிறீர்களா? பாகுபாடு இல்லாத பணியிடத்தை வழங்க விரும்புகிறீர்களா? பாகுபாடு இல்லாமல் சேவைகளை வழங்க விரும்புகிறீர்களா?
Bureau de l’intégration des étrangers et de la lutte contre le racisme (வெளிநாட்டினரின் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம்) நிர்வாகம், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கிறது. அது அவைகளுக்கு இனவெறி மற்றும் பாகுபாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்த பயிற்சிகளை வழங்க வழிகாட்டுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/racisme-et-discrimination/sengager-contre-le-racisme